திருச்சிற்றம்பலம்

# சைவநெறிக்கூடம்

Verein SAIVANERIKOODAM, Europaplatz.01, 3008 Bern

www.saivanerikoodam.ch
ganalingesuram@gmail.com
facebook.com/saivanerikoodamSwiss
☎ 078 744 50 13
078 759 99 72
079 275 68 62

நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணி செய்து கிடப்பதே

## "சைவமும் தமிழும் போட்டி நிகழ்வு – 2016"

| காலம் | இடம் | தொடர்புகளுக்கு |
|---|---|---|
| **11. 06. 2016** | சூரிச் | திரு. திருஞானசம்பந்தர் இலங்கேஸ்வரன்<br>078 874 00 39 |
| **11. 06. 2016** | மர்த்தினி (சியோன்) | திரு. தெய்வேந்திரம் சிறீதரன்<br>078 619 32 18<br>திருமதி. பாலகுமரன் சரோஜினிதேவி,<br>078 805 07 85 |
| **12. 06. 2016** | பேர்ன் | திரு. குழந்தை விக்னேஸ்வரன்<br>078 759 99 72<br>திரு. காராளசிங்கம் விஜயசுரேஸ்<br>079 275 68 62 |
| **12. 06. 2016** | லவுசான் | திரு. நவம் 076 585 85 53 |
| **05. 06. 2016** | ஜெனீவா | ஜெனீவா தமிழ் கலைகலாச்சார மன்றம்<br>திருமதி. சந்திரபாலன் இராஜேஸ்வரி<br>079 631 29 98 |
| **05. 06. 2015** | பாசல் | திரு. நேசன் 078 307 52 24 |

போட்டி நடைபெறும் முகவரிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

"ஒரு ஊராட்சியில் **(Gemeinde)** குறைந்தது 30 பிள்ளைகள் போட்டியில் பங்கேற்பின் அவ்விடத்தில் போட்டிகள் சைவநெறிக்கூடத்தால் தனியாக நடாத்தப்படும்"

**போட்டிகள்: தேவாரம் - திருவாசகம் - திருப்புகழ் - திருக்குறள் - திருவுருவண்ணம்தீட்டல் - திருவேடம் - திருக்கதை**

| வயது | பிரிவு | தேவாரம் | திருவாசகம் | திருப்புகழ் | திருக்குறள் | திருக்கதை |
|---|---|---|---|---|---|---|
| பி. ஆ. 2011 (5 வயது) | இளந்தளிர் | தோடுடையசெவியன் | பூசுவதும் வெண்ணீறு | இறவாமல் | கடவுள் வாழ்த்து 1 – 3 குறள் | திருஞானசம்பந்தர் 1 – 4 நிமிடம் |
| பி. ஆ. 2010 (6 வயது) | தளிர் | மந்திர மாவது நீறு | பூசுவதும் வெண்ணீறு | ஏறுமயிலேறி | வான்சிறப்பு 1 – 3 குறள் | மாம்பழக்கதை 4 – 6 நிமிடம் |
| பி. ஆ. 2009 (7 வயது) | மழலை | இல்லக விளக்கது | முத்திநெறி அறியாத | பக்தியால் | வான்சிறப்பு 1 – 3 குறள் | செம்மனச்செல்வி 1 – 4 நிமிடம் |
| பி. ஆ. 2008 (8 வயது) | பாலர் | தலையே நீவணங்காய் | முத்திநெறி அறியாத | துள்ளுமத வேட்கை | வான்சிறப்பு 1 - 5 குறள் | எம் ஈழத்து மன்னன் 1 – 4 நிமிடம் |
| பி. ஆ. 2007 (9 வயது) | மீளி | மாசில் வீணையும் | தென்பால் உகந்தாடும் | பக்தியால் | நீத்தார்பெருமை 1 – 5 குறள் | திருவள்ளுவர் 4– 6 நிமிடம் |
| பி. ஆ. 2006 (10 வயது) | சிறுவர் | தலையே நீவணங்காய் | உற்றாரை யான்வேண்டேன் | நாடித் தேடித் | நீத்தார்பெருமை 1 – 5 குறள் | பாரதியார் 5 – 6 நிமிடம் |
| பி. ஆ. 2005 (11 வயது) | கீழ்ப்பிரிவு | பித்தா! பிறைசூடி! | பால்நினைந் தூட்டுந் | நாடித் தேடித் | இல்வாழ்க்கை 1 – 10 குறள் | குங்குலியக் கலய 5 – 8 நிமிடம் |
| பி. ஆ. 2004 (12 வயது) | நடுப்பிரிவு | மீளா அடிமை | அம்மையே அப்பா | எதிரி லாத பத்தி | இல்வாழ்க்கை 1 – 10 குறள் | மனுநீதிச் சோழன் 6 – 8 நிமிடம் |
| பி. ஆ. 2003 (13 வயது) | திறவோர் | பூச இனியது நீறு | பாரொடு விண்ணாய் | கைத்தல நிறைகனி | விரும்தோம்பல் 1 – 10 குறள் | ஆறுமுக நாவலர் 6 – 8 நிமிடம் |
| பி. ஆ. 2002 (14 வயது) | மேற்பிரிவு | அங்கத்துறு நோய்கள்ளடி | மெய்தான் அரும்பி | நீலங்கொள் மேகத்தின் | விரும்தோம்பல் 1 – 10 குறள் | கடையிற்சுவாமி 7 – 9 நிமிடம் |
| பி. ஆ. 2001/2000 (15/16 வயது) | மிகுமேல் | பூவார் மலர் கொண்டடியார் | கடையவ னேனைக் | எனைய டைந்த | கல்வி 1 – 10 குறள் | பட்டினத்தடிகள் 7 – 9 நிமிடம் |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள போட்டி நிலையப் பொறுப்பாளர்களிடமும் பேர்ன் ஞானலிங்கேச்சுரத்திலும், மர்த்தினி ஞானலிங்கேச்சுரத்திலும் போட்டி விண்ணப்பப்படிவம் மற்றும் போட்டிக்கான பாடற்பதிப்பினைப் பெற்றுக்கொள்ளலாம்.

**இப்போட்டி தொடர்பான மேலதிக தகவல்கள் பெற 078 697 70 25 எனும் இலக்கத்துடன் அல்லது ganalingesuram@gmail.com மின்னஞ்சல் முகரியுடன் தொடர்புகொள்ளவும். மின்னஞ்ல் ஊடாகத் தொடர்புகொண்டு படிவத்தினையும் மற்றும் பாடல்களையும் பெற்றுக்கொள்ளலாம்.**

# தேவாரம்

**தோடுடையசெவி யன்**விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே.

**மந்திர மாவது நீறு** வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.

**இல்லக விளக்கது** விருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே.

**தலையே நீவணங்காய்** - தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீவணங்காய்

**மாசில் வீணையும்** மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.

**பித்தாபிறை சூடீபெரு**
மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக்
கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
அத்தாஉனக் காளாய்இனி
அல்லேனென லாமே

**மீளா அடிமை** உமக்கே ஆளாய்ப்
பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று
முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர்
வாழ்ந்து போதீரே

**பூச வினியது நீறு** புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே.

**அங்கத்துறு நோய்கள்ளடி**
யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல்
மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு
பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக்
கேதீச்சரத் தானே

**பூவார்மலர்கொண் டடியார்**தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார்புரங்க ளெரித்தவன்று மூவர்க் கருள்செய்தார்
தூமாமழைநின் றதிரவெருவித் தொறுவின் னிரையோடும்
ஆமாம்பிணைவந் தணையுஞ்சாரல் அண்ணா மலையாரே.

# திருவாசகம்

**பூசுவதும் வெண்ணீறு** பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ.

**முத்திநெறி அறியாத** மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே

**தென்பால் உகந்தாடும்**
தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பால் உகந்தான்
பெரும்பித்தன் காணேடி
பெண்பால் உகந்திலனேல்
பேதாய் இரு நிலத்தோர்
விண்பால் யோகுஎய்தி
வீடுவார்காண் சாழலோ.

**உற்றாரை யான்வேண்டேன்**
ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன்
கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையுங்
கூத்தாஉன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக்
கசிந்துருக வேண்டுவனே.

**பால்நினைந் தூட்டுந்** தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறத் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

**அம்மையே அப்பா! ஒப்பிலா மணியே!**
அன்பினில் விளைந்த ஆரமுதே!
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே! சிவபெருமானே!
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே!

**பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே**
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே

**மெய்தான் அரும்பி** விதிர்விதிர்த் துன்விரை
யார்கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய
போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக்
கண்டுகொள்ளே.

**கடையவ னேனைக்** கருணையி னாற்கலந்
தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல்
வேங்கையின்தோல்
உடையவ னேமன்னும் உத்தர கோசமங்
கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்பி ரான்என்னைத்
தாங்கிக்கொள்ளே.

# திருப்புகழ்

**இறவாமற் பிறவாமல்** எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே! குகனே! சொற் குமரசா!
கறையானைக் கிளையோனே! கதிர்காமப் பெருமாளே!

**ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே**
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்த்தமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்த பெருமாளே

**பத்தியால் யானுனைப் பலகாலும்**
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

**துள்ளுமத வேள்கைக் கணையாலே**
தொல்லைநெடு நீலக் கடலாலே;
மெள்ளவரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே;

தெள்ளுதமிழ் பாடத் தெளிவோனே
செய்யகும ரேசத் திறலோனே;
வள்ளல்தொழு ஞானக் கழலோனே
வள்ளிமண வாளப் பெருமாளே.

**நாடித் தேடித் ...... தொழுவார்பால்**
நானத் தாகத் ...... திரிவேனோ
மாடக் கூடற் ...... பதிஞான
வாழ்வைச் சேரத் ...... தருவாயே
பாடற் காதற் ...... புரிவோனே
பாலைத் தேனொத் ...... தருள்வோனே
ஆடற் றோகைக் ...... கினியோனே
ஆனைக் காவிற் ...... பெருமாளே

**எதிரி லாத பத்தி ...... தனைமேவி**
இனிய தாள்நி னைப்பை ...... யிருபோதும்
இதய வாரி திக்கு ...... ளுறவாகி
எனது ளேசி றக்க ...... அருள்வாயே
கதிர காம வெற்பி ...... லுறைவோனே
கனக மேரு வொத்த ...... புயவீரா
மதுர வாணி யுற்ற ...... கழலோனே
வழுதி கூனி மிர்த்த ...... பெருமாளே.

**கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி**
கப்பிய கரிமுகன் ...... அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பகம் எனவினை ...... கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய ...... மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு ...... பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய ...... முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த ...... அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை ...... இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் ...... பெருமாளே.

**நீலங்கொள் மேகத்தின் மயில்மீதே**
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே
மால்கொண்ட பேதைக்குன் மணநாறும்
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே

வேல்கொண்டு வேலைப்பண் டெறிவோனே
வீரங்கொள் சூரர்க்குங் குலகாலா
நாலந்த வேதத்தின் பொருளோனே
நானென்று மார்தட்டும் பெருமாளே.

**எனைய டைந்த** குட்டம் வினைமி குந்த பித்த
மெரிவ ழங்கு வெப்பு ...... வலிபேசா
இகலி நின்ற லைக்கு முயல கன்கு லைப்பொ
டிரும லென்று ரைக்கு ...... மிவையோடே
மனைகள் பெண்டிர் மக்கள் தமைநி னைந்து சுத்த
மதிம யங்கி விட்டு ...... மடியாதே
மருவி யின்றெ னக்கு மரக தஞ்சி றக்கு
மயிலில் வந்து முத்தி ...... தரவேணும்
நினைவ ணங்கு பத்த ரனைவ ருந்த ழைக்க
நெறியில் நின்ற வெற்றி ...... முனைவேலா
நிலைபெ றுந்தி ருத்த ணியில்வி ளங்கு சித்ர
நெடிய குன்றில் நிற்கு ...... முருகோனே
தினைவி ளங்க லுற்ற புனஇ ளங்கு றத்தி
செயல றிந்த ணைக்கு ...... மணிமார்பா
திசைமு கன்தி கைக்க அசுர ரன்ற டைத்த
சிறைதி றந்து விட்ட ...... பெருமாளே.

# திருக்குறள்

## கடவுள் வாழ்த்து 1 – 3 குறள்

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

**வான்சிறப்பு 1 – 5 குறள்**

வானின்று உலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று.

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து
உள்நின்று உடற்றும் பசி.

ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை.

# நீத்தார்பெருமை 1 – 5 குறள்

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு.

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.

இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு.

உரனென்னுந் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி.

# இல்வாழ்க்கை 1 – 10 குறள்

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை.

பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவ தெவன்.

இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.

ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.

அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

# விருந்தோம்பல் 1 – 10 குறள்

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.

அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்.

வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சல் மிசைவான் புலம்.

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.

பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு.

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.

# கல்வி 1 – 10 குறள்

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்.

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து.

தாமின் புறுவது உலகின் புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.